# 13

# உறுதியாய்த் தரித்திருக்கும் புனித யாத்திரிகர்

## (எபேசியர் 6:23, 24)

*கிறிஸ்தவனாக நீங்கள் மாறியது முதல், வாழ்க்கையிலே மிக அற்புதமான ஒரு பயணத்தை நீங்கள் துவங்கியுள்ளீர்கள். பூமியின்மேல் தங்களை “அந்நியரும் பரதேசிகளும்” என்று அறிக்கையிட்ட விசுவாசிகளோடே உங்களையும் இணைத்து திருமறை பேசுகிறது (எபிரெயர் 11:13). நீங்கள் ஒரு புனித யாத்திரிகர்தான், ஏனெனில் நீங்கள் இந்த உலகத்தை உங்களுடைய நிரந்தர வசிப்பிடமாக காண்பதில்லை. இங்கு நீங்கள் தற்காலிகமாக மட்டுமே இருப்பதையும் இந்த பூமிக்குரிய வசிப்பிடத்தை விட்டு தேவனோடுகூட நித்தியத்தைக் கழிக்கும்படியாக போவீர்கள் என்பதை நீங்கள் உணர்ந்துள்ளீர்கள். பவுல் இந்த உண்மையை அறிந்து கொண்டு அதிலே இருக்கும் பெரிய அமைதியையும் ஆறுதலையும் கண்டார், எனவே “கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்” என்று சொன்னார் (பிலிப்பியர் 1:21).*

*இந்த தொடர் பாடம் நிறைவுறுகிறது, எனினும் தேவனை உண்மையுடன் பின்பற்றும் ஒரு நபராக விளங்க ஆலோசியுங்கள். நீங்கள் கிறிஸ்தவனானபோது, உலக எண்ணங்களையும் ஆசைகளையும் “களைந்து போட்டு” அவரை ஏற்றுக் கொள்ளும்படி கேட்கப் பட்டீர்கள். நீங்கள் இன்னமும் உலகம் தரும் ஆறுதல்களின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாம், ஆனாலும் இந்த உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்கள் உங்கள் வாழ்க்கையை கட்டுப்படுத்த அனுமதிக்காதீர்கள். உலகத்தின் வாழ்வில் காணும் ஆசீர்வாதங்களைக் காட்டிலும் உண்மையான “வாழ்வு” அதிக முக்கியத்துவம் உள்ளது. இயேசு இந்த உண்மையைச் சொல்லி, “ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளாயிருக்கிறது” என்றார் (லூக்கா 12:23).*

*கர்த்தருக்கென்று நீங்கள் சேவை செய்யும் போது, கர்த்தருக்கு நீங்கள் ஒப்புக் கொடுத்த வாழ்க்கையை தவறுகளோடு ஒத்துப்போகச் செய்யும்படி தொடர்ந்து சாத்தான் உங்களுக்கு அழைப்பு விடுப்பான். தேவனுக்கு கீழ்ப்படிவதைக் குறித்த உங்கள் முடிவை மாற்றிவிடக் கூடாது. உங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தில் நீங்கள் உறுதியாய் தரித்திருக்க வேண்டியது அவசியம். திருமறை முழுவதிலும், கிறிஸ்தவர்கள் தங்களுடைய அர்ப்பணிப்பைக் குறைத்துக் கொள்ளவோ அல்லது ஒப்புக்கொடுத்தலை மாற்றிக் கொள்ளவோ கூடாது என்று எச்சரிக்கிறது (காண்க 1 பேதுரு 5:8, 9; வெளிப்படுத்தின விசேஷம் 2:10).*

### உறுதியாய் தரித்திருக்க கட்டளை

*நீங்கள் கிறிஸ்துவுக்குள் முழுக்கப்பட்டபோது, நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்ட*

*வாழ்க்கையை வாழ அர்ப்பணித்துக் கொண்டீர்கள். ஒவ்வொரு தீர்மானமும், ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு சிந்தனையும் தேவனுடைய காரியங்களுக்காகவே ஒருமுகப்படுத்த வேண்டும். இந்த பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்வுமுறை உலக வாழ்வின் ஆவிக்குரிய போராட்டத்தில் நீங்கள் யுத்தம் செய்யும்போது நீங்கள் தாக்கப்படலாம். வாழ்க்கையில் பலதரப்பட்ட சூழ்நிலைகளை நீங்கள் சந்திக்க வேண்டிய அவசியம் இருப்பதால் உங்களுக்கு நீடித்த பொறுமை அவசியமானது (ரோமர் 5:3; எபேசியர் 3:13; 2 தெசலோனிக்கேயர் 1:4). தேவனுடைய சத்தியத்துக்கென்று தங்களை முழுமையாய் ஒப்புக்கொடுக்காத கிறிஸ்தவர்களைப் பார்த்து நீங்கள் சோர்வடைந்து விடாதீர்கள் (காண்க தீத்து 1:16). சோதனைகளினால் இருதயத்தை நெகிழ விட்டுவிடாதீர்கள். சாத்தானுடைய தீமையான சக்திகள் உங்களை ஆட்கொண்டிருப்பதாகத் தெரியும் போது சோர்ந்துவிடாதீர்கள் (நடபடிகள் 18:5-10ஐக் காண்க).*

*தம்மைப் பின்பற்றுவோர் தங்களுடைய ஒப்புக் கொடுத்த வாழ்க்கை தேவனுக்கென்று கடமையுணர்வுடன் செயல்படுவதை கைவிடத்தக்கதாக சோதிக்கப்படுவார்கள் என்பதை தேவன் அறிவார். சிலர் தங்களுடைய புனித பயணத்தின் துவக்கத்தை நினைவில் கொண்டிருப்பார்கள் ஆனால் பின்னதாக சோதனைகளை பின்பற்றி பாவம் செய்ய தெரிவு செய்து, கர்த்தருடைய துணையை தவறுகளோடு ஒத்துபோகச் செய்வார்கள் (காண்க 2 தீமோத்தேயு 4:10; எபிரெயர் 10:24-26). கிறிஸ்தவர்களுக்கு ஒரு அவசரக் கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியைகளிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1 கொரிந்தியர் 15:58). "உறுதிப்பட்டவர்களாயிருங்கள்" என்ற பதத்தின் பொருள் எவ்விதத்திலும் அசையாமல் ஒரே நிலையில் அமைந்து கொள்வது. மாறுபட்ட வார்த்தைகளில் ஒன்று சத்தியத்தின் அஸ்திபாரத்தைக் குறிப்பிடுகிறது (காண்க 1 தீமோத்தேயு 3:15). சத்தியமானது நித்தியத்துக்கும் அசையாமல் அமைவு பெற்றதுபோல கிறிஸ்தவனும் கர்த்தருக்கென தான் அர்ப்பணித்து கொண்டதை நித்தியத்துக்கும் மாறாமல் காத்துக் கொள்ள வேண்டும்.*

## உறுதியாய்த் தரித்திருத்தலில் உள்ள ஆசீர்வாதங்கள்

*தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து தன்னை ஒப்புக்கொடுத்து உறுதியாய்த் தரித்திருப்பது அவ்வளவு சுலபமல்ல. நீங்கள் ஒரு யுத்தத்திலே கலந்து கொண்டுள்ளீர்கள் என்பதை மனதில் வையுங்கள் (எபேசியர் 6:10-22). தமக்கு கீழ்ப்படியும்படி ஒப்புக்கொடுத்தவர்கள் தவறுகளோடு ஒத்துபோக ஏதுவான அழைப்புகளைப் பெறுவார்கள் என்று தேவன் அறிவார். இப்படிப்பட்ட அபாயங்களினிமித்தம் தான் கிறிஸ்து சொன்னார், "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்" (லூக்கா 13:24; வலியுறுத்துதல் என்னுடையது).*

*எபேசியருக்கு எழுதின நிருபத்தின் நிறைவு பகுதியில், கிறிஸ்தவர்கள் உறுதியாய்த் தரித்திருக்கவும் தேவனுக்கு அர்ப்பணித்ததில் நிலைத்திருக்கவும்*

ஏதுவான நான்கு ஆசீர்வாதங்கள் பட்டியலிடப் பட்டுள்ளன. தேவனுக்கு உண்மையாய்த் தரித்திருக்க, பலமான சோதனைகள் வந்து மீண்டும் உங்களை உலகத்துக்குத் திரும்பச் செய்ய எத்தனிக்கும்போது நிலைத்திருக்க இந்த ஆசீர்வாதங்கள் உதவிகரமாயிருக்கும்.

*ஆசீர்வாதம் 1: ஐக்கியத்தினால் உண்டாகும் சமாதானம்* (வசனம் 23அ). எபேசியர் 2:14, 15ல் சமாதானத்தின் ஆசீர்வாதம் விவாதிக்கப்படுகிறது. நீங்கள் கிறிஸ்தவனானபோது, தேவனோடு ஒப்புரவானீர்கள். தேவனுக்கு ஒப்புரவானதினாலே, நீங்கள் தேவனுடைய (சபையாகிய) வீட்டிலே ஒரு அங்கமாகிறீர்கள். தேவனோடு சமாதானமாய் வாழ்வது என்பது ஒரு மாபெரும் ஆசீர்வாதம். ஏனெனில் இனியும் தேவனுடைய கோபாக்கினையை நீங்கள் பெறப் போவதில்லை. நீங்கள் தேவனோடு சமாதானமாய் வாழும்போது, ஜெபிக்கும்போது அவரை "அப்பா! பிதாவே!" என்று அழைக்கும் உரிமையைப் பெற்றுள்ளீர்கள் (காண்க ரோமர் 8:15; கலாத்தியர் 4:6). கிறிஸ்தவனாகிய நீங்கள், உங்கள் சக மனிதரோடும் சமாதானமாய் வாழ ஆசீர்வதிக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் கிறிஸ்தவனாவதற்கு முன்பு, உங்களை மட்டுமே பாதுகாத்துக் கொள்வதில் அக்கரை கொண்டிருந்தீர்கள், சுயத்திற்கென்று சேவை செய்து கொண்டதை உறுதிப் படுத்தியும் கொண்டீர்கள். இப்பொழுது உங்கள் சுயத்தை சிலுவையில் அறைந்துவிட்டு கிறிஸ்துவைப் போல மற்றவர்களுக்கு சேவை செய்ய ஆர்வமுடையவர்களானீர்கள் (காண்க பிலிப்பியர் 2:3-11). கிறிஸ்தவன் தேவனிடத்தில், மற்றவர்களோடு சேர்ந்து, தானும் சமாதான ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறான், ஏனெனில் அவன் "சமாதான பிரபுவின்" கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்துள்ளான் (ஏசாயா 9:6).

நித்திய சமாதானத்தை அளிக்கவே கிறிஸ்து வந்தார். கிறிஸ்துவின் பிறப்பின்போது தேவபக்தர்கள் சத்தமிட்டு அவரது ஊழியம் "சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும்" என்றார்கள் (லூக்கா 2:14; KJV). கர்த்தர் தைரியமாக "உலகம் கொடுக்கிற பிரகாரமாக" அல்ல தமது சமாதானத்தையே தருவதாகச் சொன்னார் (யோவான் 14:27). கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய கட்டளைகளில் உறுதியாய் தரித்திருந்து பின்பற்றிப் போகிறவர்கள், இந்த பூமிக்குரிய வாழ்வை விட்டு "தங்கள் பிரயாசங்களை விட்டு ஓய்ந்திருப்பார்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 14:13). கிறிஸ்தவரான நீங்கள், இந்த சமாதானத்தை அனுபவிக்கிறீர்கள். உங்களின் ஒப்புக்கொடுத்தலில் உறுதியாய்த் தரித்திருக்கும் போது, நீதியுள்ள ஐக்கியத்தின் விளைவாக நீங்கள் இந்த சமாதானத்தை அனுபவிப்பீர்கள்.

*ஆசீர்வாதம் 2: குடும்ப பந்தத்தில் வரும் அன்பு* (வசனம் 23ஆ). 1960களின் பின்பகுதியில் பிரபலமான ஒரு பாட்டு "உலகத்திற்கு இப்போதைய தேவை" எனும் தலைப்பிடப்பட்டு வெளியிடப் பட்டது. இந்தப் பாடல் "உலகத்திற்கு அன்பு இனிமையான அன்பு" ஒவ்வொருவருக்கும் தேவை என்று ஆலோசனை கூறியது. ஜனங்களின் இருதயங்களில் ஒரு பொதுவான ஆவல் உண்டு என்றும் அந்தப் பாடல் வெளிப்படுத்தியது. ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் யாரோ ஒருவர் தன்னை அன்பு செலுத்துகிறார்கள் என்று அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அநேகர் இந்த அன்பை பொருத்தமில்லாத இடங்களில் தேடுகிறார்கள். உலகம் உண்மையான சமாதானத்தையோ நேர்மையான அன்பையோ

கொடுப்பதில்லை. எபேசியர் 2:3-5ல் உலகத்தால் கொடுக்கப்படும் அன்புக்கும் தேவனால் கொடுக்கப்படும் அன்புக்குமிடையேயான வித்தியாசத்தை பவுல் விவரிக்கிறார்.

தேவனுடைய குடும்பத்தில் அங்கமாக ஆனதால் உண்மையான அன்பை நீங்கள் கண்டுபிடித்தீர்கள். தமது சீஷர்கள் அன்பைப் பகிர்ந்துகொள்ளும் விதத்தால் அடையாளப்படுத்தும்படி கர்த்தர் தமது சபையைத் திட்டமிட்டார் (யோவான் 13:34, 35). சகோதரர்களுக்குள்ளே உண்மையான அன்பை முன்னேறச் செய்வதே கிறிஸ்தவனின் உச்சக்கட்ட வளர்ச்சிக்கான அடையாளம் என்று கிறிஸ்தவர்கள் சொல்லப்பட்டிருக்கிறார்கள் (1 கொரிந்தியர் 12:31; 13:13). கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களாகிய நீங்கள், கர்த்தருடைய அன்பைப் போலவே ஒருவரிலொருவர் அன்புகூருகிறீர்கள். நீங்கள் ஒரு கிறிஸ்தவன் என்பதால், உங்கள் மீது அன்பு காட்டாதவர்கள் மேலும் நீங்கள் அன்புகூர விடுதலை பெற்றுள்ளீர்கள். மற்றவர்களிடத்தில் அன்புகூரும் இந்த விடுதலையானது, அவர்களின் பிரதிபலிப்பு எப்படிப்பட்டதாக இருந்தாலும், ஒரு ஆச்சரியமான ஆசீர்வாதமாயிருக்கிறது.

உலகத்தில் இருப்பவர்களுக்கு நீங்கள் எதையாகிலும் செய்தாலோ, அவர்களுக்கு ஏதாகிலும் செய்யும் பெலன் உங்களிடத்தில் இருப்பதைக் கண்டாலோ அவர்கள் உங்களிடத்தில் அன்புகூருவார்கள். திராணிக்கேற்ற கருவியாகவே அன்பு உலகத்தில் பயன்படுத்தப்படுகிறது. கிறிஸ்தவத்திலோ திராணிக்கேற்ற கருவியாக அன்பு இல்லாமல் சேவையின் வெளிப்பாடாக ஆகிறது.

அன்பின் செய்கைகளால் கிறிஸ்தவன் தேவனைப் போல் தான் மாறிக்கொண்டிருப்பதை விளங்கப் பண்ணுகிறான் (காண்க மத்தேயு 5:44-48). நீங்கள் உங்கள் அன்றாட வாழ்வில் தேவ அன்பை செயல்படுத்தி மற்றவர்களுக்கு சேவை செய்வதால், உங்கள் உள்ளத்தில் திருப்தியால் நிறைக்கப்பட்ட மாபெரும் ஆசீர்வாதங்களை கண்டடைவீர்கள். மற்றவர்களிடத்தில் நீங்கள் கிறிஸ்தவ அன்பை விளங்கப் பண்ணுவதில் உறுதியாயிருந்து அதிலே தரித்திருக்க வேண்டும். நீங்கள் ஒருவேளை கசப்புணர்வையும் முறுமுறுப்பையும், கோபத்தையும் உடையவராக சோதிக்கப்படலாம்; ஆகிலும் தேவன் உங்களிடத்தில் நிலையான அன்புகூருவதுபோல, நீங்களும் மற்றவர்களிடத்தில் அன்புகூரும்படி ஒப்புக்கொடுத்ததில் உறுதியாய் தரித்திருக்க வேண்டும் (காண்க கொலோசெயர் 3:12-14). அன்புகூரும் தேவனைப் போல நீங்களும் அன்புகூர ஒப்புக் கொடுத்திருந்தால் மட்டும் "கிறிஸ்துவின் சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது" (கொலோசெயர் 3:15அ).

*உலகச் சாதனையான கின்னஸ் புத்தகத்தில்* மர்லின் வாஸ் சேவண்ட் பெயர் இடம் பெற்றுள்ளது. அவருக்கு தன்னிகரற்ற பாராட்டுகள் மிகவும் உச்சக்கட்ட நிலையில் குவிந்ததால் (கணக்கியலில் அறிவுத்திறன் மிக்கவராயிருந்தமைக்காக) வாழ்ந்து கொண்டுள்ள ஒருவர் கூட அவருக்கு நிகரில்லை என இந்த பெயர் இடம் பெற்றது. "மர்லினைக் கேளுங்கள்" எனப் பெயரிடப் பட்ட தலைப்பின் கீழ் ஒரு வாராந்திர பத்திரிக்கையின் ஒருபகுதியில் எழுதி வருகிறார். அவரது கட்டுரைகளில் ஒன்றில் "யாருமே கொடுத்திராத முழுமை பெற்ற ஒரு வெகுமதி உங்களுக்கு அளிக்கப்பட்டதாக எதைக் கருதுவீர்கள்?" என்ற கேள்விக்கு பதிலாக அமைந்திருந்தது. திருமதி வாஸ் சேவண்ட் இதற்கு ஞானமாக பதிலளித்திருந்தார்.

அதில் "எனக்கு, அளிக்கப்படும் சிறப்பான முழுமை பெற்ற வெகுமதி மூன்று வார்த்தைகளை கொண்டவை: 'நான் உங்களை அன்புகூருகிறேன்' " என்பதே.[1] தேவனுடைய அன்பு உலகத்துக்கும் கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால் உலகம் இந்த அன்பை புறந்தள்ளுகிறது. கிறிஸ்தவன் இந்த தேவ அன்பை ஏற்றுக்கொண்டு இந்த தெய்வீக வெகுமதியை சொல்லாலும் செயலாலும் அன்புகூருவதன்மூலம் மற்றவர்களுக்கு கொடுக்கிறான். கிறிஸ்தவர்களாகிய நீங்கள் உங்கள் வாழ்க்கையில் காணும் ஜனங்களுக்கு தேவனுடைய அன்பை வழங்கும்படி தேவன் எதிர்பார்க்கிறார்.

*ஆசீர்வாதம் 3: விசுவாசத்தினால் உண்டாகும் நம்பிக்கை* (வசனம் 23ஆ). விசுவாசத்தினால் நடப்பதாலும் தேவன் மேலுள்ள விசுவாசத்தினாலும் கிடைக்கிற பிரதிபலன்களைக் குறித்து பவுல் விவாதிக்கிறார் (எபேசியர் 1:1, 2; 2:8-10). இப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதால் உங்களுக்கு தைரியத்தோடு கூடிய நம்பிக்கை உண்டாயிருக்கிறது, ஏனெனில் உலகம் உங்கள் முன்பு வைக்கும் பிரச்சனைகளைக் காட்டிலும் தேவனுடைய வல்லமை பெரிதாயிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இந்த நம்பிக்கையை பவுல், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு" என்றார் (பிலிப்பியர் 4:13). பவுலின் நம்பிக்கை தேவன் தனக்கு என்ன செய்வார் என்பதில் மாத்திரம் நம்பிக்கையுள்ளவராயிராமல், உறுதியாய் தரித்திருக்கிற யாவருக்கும் தேவன் என்ன செய்வார் என்பதிலும் இருந்தது: "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலிப்பியர் 4:19). கவலையும் வரும்நிலையைக் குறித்த அச்சமும் உங்கள் விசுவாச வாழ்க்கையை அணைத்துப்போடும். உங்கள் நம்பிக்கையாலும் தொடர் ஜெபத்தாலும் சந்தேகத்தை நீங்கள் மேற்கொள்ளலாம் (பிலிப்பியர் 4:4-9). உங்கள் விசுவாசம் சர்வவல்லமையுள்ள தேவன் பேரில் இருப்பதால் தைரியமான நம்பிக்கை உங்களுக்கு உண்டாயிருக்கிறது (காண்க சங்கீதம் 71:5; நீதிமொழிகள் 3:26; 14:26). நீங்கள் நம்பிக்கையிலே உறுதியாய் தரித்திருக்கிற வரைக்கும், இந்த நம்பிக்கையிலே நீங்கள் ஆசீர்வாதங்களைப் பெறுவீர்கள்.

ஆபகூக் 3:17-19, விசுவாசத்தின் நம்பிக்கையைக் குறித்து விவாதிக்கப்படும் பெரிய வசனப்பகுதிகளில் ஒன்று. உலக நம்பிக்கையை அசர வைக்கும் திரளான காரியங்களை தீர்க்கதரிசி வரிசைப் படுத்துகிறார். ஆபகூக் தான் திரளான ஆபத்துக்களைச் சந்திக்க நேர்ந்தாலும், தேவனில் கொண்டுள்ள நம்பிக்கையிலே தான் குறைந்து போக அனுமதிக்க மாட்டார் என்று குறிப்பிடுகிறார்: "நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன், அவர் என் கால்களை மான் கால்களைப் போலாக்கி உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்." ஒப்புக் கொடுக்கப்பட்ட கீழ்ப்படிதலினால் விளையும் நம்பிக்கையின் ஆசீர்வாதத்தை கிறிஸ்தவர்கள் பகிர்ந்து கொள்கின்றனர்.

*ஆசீர்வாதம் 4: நேர்மையிலிருந்து கிருபை* (வசனம் 24). தேவனுடைய கிருபையிலே தொடங்கி தேவனுடைய கிருபையில் நிறைவுபெறும் புத்தகம் எபேசியர். அவர் தமது இரக்கத்தினால், தெய்வீக கட்டளைகளுக்கு கீழ்ப்படிவோருக்கு பாதுகாப்பை தேவன் அருளுகிறார். உறுதியாய்த் தரித்திருப்பதும் கர்த்தரைப் பின்பற்றிப்போகிற விஷயத்தில் பின்னிட்டுப்

பாராமல் அவருடைய இரக்கங்களை இழந்துபோகாமலும் இருப்பதே உங்களுக்கு கொடுக்கப்பட்ட கடமை. அவிசுவாசத்தினாலே ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய அன்பின் இரக்கத்தை இழந்து போகக்கூடும் (எபேசியர் 5:5, 6). ஆனால் தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளும்படி ஒப்புக்கொடுத்தவர் தேவனுடைய அபரீதமான ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியும்.

தேவனுடைய கிருபை பாவத்திலிருந்து உங்களை இரட்சித்து, நித்திய இரட்சிப்பை உறுதியளித்திருக்கிறது. கிருபை செய்யும் கிரியையை யோவான் விளக்கமளித்து அதின் பலனாக "ஒளியின் பிள்ளைகளாக நடந்து [கொண்டு] கொள்ளுவதை" குறிப்பிடுகிறார் (1 யோவான் 1:7-10). இப்பொழுது நீங்கள் இருளை விட்டு வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுவதால் இப்படி எதிர்பார்க்கப்படுகிறீர்கள் (எபேசியர் 5:8).

## நிறைவுறும் சிந்தனைகள்

தேவனுக்கு கீழ்ப்படிய தங்களை ஒப்புக்கொடுத்து உறுதியாய்த் தரித்திருப்பவர்களுக்கு அநேக ஆசீர்வாதங்களை James D. Bales என்பவர் "இப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவன்" எனும் தலைப்பிடப்பட்ட தமது புத்தகத்தில் வரிசைப்படுத்தியுள்ளார். அப்படிப்பட்ட விசுவாசமுள்ள புனித யாத்திரிகர் கீழ்வரும் காரியங்களில் ஆசீர்வாதங்களைப் பெறுகின்றனர்.

- ஜெபம்
- வாழ்க்கையில் ஒரு நோக்கம்
- வாழவும் மரிக்கவும் கொண்டுள்ள ஒரு விசுவாசம்
- தேவபக்தியுள்ள சிநேகிதர்கள்
- பரிபூரண ஜீவன்
- திருப்தி செய்யும் தொழுகை
- நல்ல ஆரோக்கியமான பழக்கங்கள்[2]

ஏவப்பட்ட தேவனுடைய வழிகாட்டலின் துணையுடன் நீங்கள் உங்கள் விசுவாசத்தின் பயணத்தை துவக்கியுள்ளீர்களாதலால் இந்த ஆசீர்வாதங்கள் உங்களுடையது. உங்கள் மனமாற்றம் சாத்தானுடைய தீமையான இருளின் இராஜ்யத்திலிருந்து மாற்றி தேவனுடைய குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தியிருக்கிறது. உங்கள் மனமாற்றத்தின் பேரில், பொய்யாய்த்தோன்றும் மெய்யான வாழ்வின் வாழ்விலும் சாவிலும் அடைய இப்போது துவங்கியுள்ளீர்கள். இந்த புதிய வாழ்வுமுறையில் தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்தல் தேவை. நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டு சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரிடத்தில் இப்பொழுது பரிசுத்தமாயிருக்கிறீர்கள். எனவே உங்களுடைய எல்லா செயல்களிலும் சொற்களிலும் அவரை நீங்கள் மகிமைப்படுத்த வேண்டும்.

கிறிஸ்தவனாக இருப்பதால் மகத்தான ஆசீர்வாதங்களை சாத்தியமாக்குகிறது. அது தேவனிடத்திலிருந்து வரும் ஈவும், உங்களுடைய ஆத்துமாவுக்கான அவருடைய அன்பின் பிரதிபலனுமாகும். இந்த ஈவிலிருந்து திரும்பி விடாதீர்கள். பின்வரும் காரியங்களில் தீர்மானம் செய்யுங்கள் (1) எப்பொழுதும், கடினமான சூழ்நிலைகளிலும் கூட தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்ற; (2) உங்கள்

*கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்ற; மற்றும் (3) உங்கள் நேர்மையை பராமரிக்க.*

---

குறிப்புகள்

[1]Marilyn vos Savant, "Ask Marilyn," *Parade* (10 May 1998): 10. [2]James D. Bales, *You Are a Christian Now* (Dallas: Eugene Smith, n.d.), 91-100.